18—

தேர்வு எழுதும் அரங்கம்

***26647—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 500 மாணவர்கள் அமரும் அளவிற்கு தேர்வு எழுதும் அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் அரசு தொழிற்பயிற்சி நிலையம் 1962-ல் துவங்கப்பட்டு, 35.46 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட இடத்தில் செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையம் 14 தொழிற் பிரிவுகளுடன், 1,127 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. 1,044 மாணவர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

அகில இந்திய தொழில் தேர்வின்போது, சேலம் அரசு தொழிற்பயிற்சி நிலையம், தேர்வு மையமாகச் செயல்படுகிறது. தேர்வின்போது செய்முறை பயிற்சியானது பணிமனையிலும், கருத்தியல் தேர்வு அங்குள்ள வகுப்பறையிலும் நடைபெற்று வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களோடு, சேலத்தில் உள்ள சில தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களும் இங்கு தேர்வு எழுதி வருகின்றனர். இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழில் தேர்விற்கான போதுமான இடவசதி தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தின் நெறிமுறைகளின்படி உள்ளது என்பதால், தனியாகத் தேர்வு எழுதுவதற்கென அரங்கம் அமைக்கும் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.*

2019 ஜூலை 2]

சேலத்திலே அரசு தொழிற்பயிற்சி நிலையம் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டிருக்கிறது. அதன்பிறகு, ஆடவர்களுக்கென தனியாக தொழிற்பயிற்சி நிலையமும், மகளிருக்கென தனியாக தொழிற்பயிற்சி நிலையமும், ஆக இரண்டு தொழிற்பயிற்சி மையங்கள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிற்பயிற்சி மையங்களிலே தேர்வு எழுதும் காலத்திலே, மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதுவதற்கு மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். தொழிற்பயிற்சி மையத்தில் உள்ள செய்முறைக் கூடத்தில் lathe machine, welding machine, milling machine *இருக்கின்றன. ஆக, இந்த* machines *உள்ள பணிமனையில்தான் மாணவ, மாணவிகள் தேர்வு எழுத பணிக்கப்படுகிறார்கள். பணிமனையில் இருக்கின்ற நடைபாதையில் அமர்ந்து தேர்வு எழுதுகிற ஓர் அவல நிலை அங்கு இருந்து கொண்டிருக்கின்றது. எனவே, இந்தத் தேர்வு எழுதுவதற்கும், மற்ற பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஒரு தனி அரங்கத்தை அமைத்து, அதற்குத் தேவையான மேஜை, நாற்காலி போன்ற தளவாடங்களை ஒதுக்கித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய தொழிற்பயிற்சிக் குழுமம், அதாவது* National Council for Vocational Training *ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கத் தேவையான அடிப்படை வசதிகளை நிர்ணயம் செய்கிறது. இதில் பணிமனை, வகுப்பறைகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தளவாடங்கள் குறித்த விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த விதிமுறைகளின்படி அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு சேலம் தொழிற்பயிற்சி நிலையமானது செயல்பட்டு வருகிறது. இந்த விதிமுறைகளில், தேர்வு நடத்துவதற்காக ஓர் அரங்கம் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை.*

இத்தொழிற்பயிற்சி நிலையம் 1962 ஆம் ஆண்டு துவங்கப்பட்டதிலிருந்து இன்று வரை தேர்வுகள், வகுப்பறைகளிலும், பணிமனைகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. அகில இந்திய தொழில் தேர்வானது, ஆண்டிற்கு இருமுறை மட்டுமே

நடத்தப்படுவதால், தேர்வுகள் நடத்துவதற்கெனத் தனியாக அரங்கம் அமைக்க இதுவரை தேவை எழவில்லை. எனினும், எதிர்காலத்தில் தேவை இருப்பின், இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு எழுதுவதற்கான அரங்கம் குறித்து தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தின் விதிமுறைகளில் குறிப்பிடப்படவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாணவ, மாணவிகளின் தேவைக்காக அந்தப் பயிற்சி நிலையத்திலே அரங்கம் அமைப்பது அவசியமான ஒன்றாக இருக்கிறது. எதிர்காலத்தில் online–ல் தேர்வு எழுதுகிற நிலை வந்தால்கூட ஓர் அரங்கம், அதற்குத் தேவையான கணினி மற்றும் மேசை, நாற்காலிகள் போன்றவையெல்லாம் தேவைப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகளிர் பயிற்சி நிலையத்திற்கு விடுதி இல்லாத நிலை இருக்கிறது. மகளிருக்கான ஒரு விடுதி தேவைப்படுகிறது. அந்தப் பயிற்சி நிலையத்தில் 8 காவலர்கள் இரவு, பகலாக 2 வேளைகளிலும் இருக்க வேண்டும். ஆனால் 2 காவலர்கள் மட்டுமே இருக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மகளிருக்கான பயிற்சி நிலையத்திலே போதிய கழிப்பிட வசதியும் இல்லாத நிலை இருக்கிறது. அதையும் கவனத்தில் கொண்டு, அரசு இந்த குறைகளையெல்லாம் களைவதற்கு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம்

2019 ஜூலை 2]

அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் விடுதி இல்லை, கழிப்பிடம் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். துறை ரீதியாக ஆய்வு செய்து, தேவைப்படும்பட்சத்தில், அவை கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

கணினி பயிற்சிக் கல்லூரி

***35600—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மூலமாக கணினி பயிற்சிக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் மீளா துயில்கொள்ளும் தங்கத்தாரகை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் கணினி பயிற்சிக் கல்லூரி துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*